மாணவர்களைப் பாடசாலைக்குத் தேர்ந்தெடுப்பதற்கும் மாணவர்களுக்கு உதவிப்பணம் வழங்குவதற்குமாகத் தரம் ஐந்து மாணவர்களுக்கு நடாத்தப்படும் பரீட்சை, 2011 ஓகஸ்ட்

வினாத்தாள் I


45 நிமிடம

தரப்பட்டுள்ள அறிவுறுத்தல்களுக்கேற்ப கீழே உள்ள வினாக்களுக்கு விடை எழுதுக.


சோடிச் சொற்களுக்கு மிகப் பொருத்தமான உருவைத் தெரிவு செய்க.

1. அறிவு - பொழுதுபோக்கு


(1)

(2)

(3)



2. ஒளி - வெப்பம்


(1)

(2)

(3)




- குறைந்த தொடர்பு உள்ள உருச் சோடி இருக்கும் அடைப்பைத் தெரிவு செய்க.

3.


(1)

(2)

(3)

4.


(1)

(2)

(3)

- தரப்பட்டுள்ள கவிதையைக் கொண்டு விடை எழுதுக.

சிறகடிக்கும் பறவைகளின் கீத ஒலி கேட்கும்.
வீசும் தென்றல் காற்று உடலுக்கு குளிர்ச்சி தரும்.
மலரும் மலர்களோ எங்கும் மணம் பரப்பும்.
அதிகாலைப் பொழுதோ இன்பம் ஊட்டும்.

www.Edukinniya.lk

5. கவிதையில் குறிப்பிடப்படுவது, காலையில் வீசும் காற்று
   (1) பறவைகளின் கீத ஒலியை கேட்கச் செய்யும் என்பதை
   (2) உடலுக்குக் குளிர்ச்சி தரும் என்பதை
   (3) மலர்கள் மணம் பரப்பும் என்பதை

6. காலையில் நடைபெறும் ஆனால் கவிதையில் குறிப்பிடப்படாத ஒரு விடயம்
   (1) குளிர்ச்சியான தென்றல் காற்று வீசுதல்
   (2) நறுமணமுள்ள மலர்கள் மலருதல்
   (3) ஒளி மெதுவாகப் பரவுதல்

7. வெற்றியினால் .................... அடைந்த இரசிகர்கள் ..........................
   (1) மகிழ்ச்சி - கைதட்டினர்
   (2) களைப்பு - வாழ்த்தினர்
   (3) இன்பம் - கண்ணீர் விட்டனர்

- உவமானத்திற்குப் பொருத்தமான சந்தர்ப்பத்தைக் காட்டும் விடையைத் தெரிவு செய்க.


8. 'எரிகிற நெருப்பில் எண்ணெய் ஊற்றினாற் போல்'
   (1) சிக்கலைத் தீர்க்க உதவுதல்
   (2) மேலும் கோபமூட்டச் செய்தல்
   (3) வறியவர்களுக்குப் பண உதவி செய்தல்

* * * * *

9. 'ஆகாயத்தில் கோட்டை கட்டுவது போல்'
   (1) செய்ய முடியாத செயலைச் செய்ய முயலுதல்
   (2) மிக ஊக்கத்துடனும் தைரியத்துடனும் செயற்படுதல்
   (3) பெரிய வேலையைச் செய்யத் தொடங்குதல்


♦ தொடக்கத்தில் உள்ள உருக்களுடன் தொடர்புபடுத்தும்போது கிடைக்கும் உருவைத் தெரிவு செய்க.

10.



(1) (2) (3)


11.



(1) (2) (3)


♦ உருவைப் பூரணப்படுத்த தேவையான பகுதியைத் தெரிவு செய்க.

12.



(1) (2) (3)


13.



(1) (2) (3)

♦ வெற்று அடைப்புக்குப் பொருத்தமான உருவைத் தெரிவு செய்க.


14.



(1) (2) (3)

more Past papers
at www.Edukinniya.lk


15.



(1) (2) (3)

- தரப்பட்டுள்ள அறிவுறுத்தல்களுக்கேற்பச் சரியான விடையைத் தெரிவு செய்க.

16. பூரணச் சந்திரன் உதித்து பின்னர் வரும் இரு வாரங்களினுள் 4 நாட்களில் இரவு வானில் சந்திரன் தோன்றிய விதங்கள் பின்வரும் உருக்களில் காணப்படுகின்றன.





A B C D

அந்நான்கு நாட்களும் இடம்பெறும் ஒழுங்கு வரிசை

(1) $D \rightarrow A \rightarrow B \rightarrow C$ (2) $C \rightarrow B \rightarrow D \rightarrow A$ (3) $D \rightarrow B \rightarrow C \rightarrow A$


17. உருக் கோலத்தில் உள்ள வெற்றிடத்திற்குப் பொருத்தமான உருவைத் தெரிவு செய்க.






(1) (2) (3)


18. உருவில் காட்டப்பட்டவாறு இரு நுனிகளும் சந்திக்குமாறு ஒரு கம்பியை வளைத்துப் பெறத்தக்க வடிவம் யாது?




(1) (2) (3)

19. முறிந்த கோடுகளினால் காட்டப்பட்டுள்ள மூன்று பாதைகளில் நீளம் குறைந்த பாதை யாது?




(1) (2) (3)

20. சதுரமுகியை அமைக்கத்தக்க உருவைத் தெரிவு செய்க.



(1) (2) (3)

21. இவ்வுருவில் உள்ள முக்கோணிகளின் எண்ணிக்கை யாது?



(1) 8 (2) 10 (3) 12

22. பிழையான கோவையைத் தெரிவு செய்க.

(1) 6x6-6=30 (2) 5x5+5=30 (3) 33-33-3=30

23. சரியான கோவையைத் தெரிவு செய்க.
(1) 888 + 88 + 88 + 8 + 8 = 1000
(2) 888 + 88 + 8 + 8 + 8 = 1000
(3) 888 + 88 + 88 + 8 + 8 + 8 = 1000


24. சதுர வடிவமான மரக்கறித்தோட்டம் ஒன்றின் ஒரு பக்கத்தின் நீளம் 12 மீற்றர் ஆகும். அதன் எல்லை வழியே 3 மீற்றர் இடைத்தூரங்களில் கம்பித் தூண்கள் உள்ளன. அவ்வாறு உள்ள கம்பித் தூண்களின் எண்ணிக்கை யாது?
(1) 20 (2) 16 (3) 12

25. A யின் தந்தை B யின் மகனெனின், A ஆனவர் B யிற்கு என்ன உறவுமுறை
(1) பேரன் (2) பாட்டன் (3) மகன்

www.Edukinniya.lk

- எண்கள் அமைந்துள்ள விதத்தைப் பார்த்து விடையைத் தெரிவு செய்க.

26. இக்கோலத்தில் C, D ஆகியவற்றுக்குப் பொருத்தமான எண்கள் முறையே யாவை?




(1) 30உம்35உம் (2) 40உம்45உம் (3) 33உம்......உம்

27. இக்கோலத்தில் A, B ஆகியவற்றுக்குப் பொருத்தமான எண்கள் முறையே யாவை?




(1) 4உம்6உம் (2) 6உம் 4உம் (3) 8உம் 4உம்

- ஒரு நிரையில் கண்ணன் தொடக்கத்திலிருந்து 12 ஆவதாக நிற்கின்றான். அவன் கடைசியிலிருந்து 8 ஆவதாக நிற்கின்றான். இதற்கேற்ப

28. நிரையில் எத்தனை நபர்கள் நிற்கின்றனர்?
(1) 19 (2) 20 (3) 21

29. அந்நிரையில் மோகன் தொடக்கத்திலிருந்து 5 ஆவதாக நின்றால், அவனுக்குப் பின்னால் எத்தனை நபர்கள் நிற்கின்றனர்?
(1) 16 (2) 15 (3) 14

- அட்டவணையில் உள்ள தகவல்களுக்கேற்ப விடை எழுதுக.

| நாள் | ஜனவரி 31 | பெப்ரவரி 28 | மார்ச்31 | ஏப்ரல் 30 | மே 31 |
|---|---|---|---|---|---|
| எண்ணிக்கை | 31 | 59 | ..... | 120 | 151 |

30. மார்ச் 31 ஆந் திகதிக்குப் பொருத்தமான எண் யாது?
(1) 89 (2) 87 (3) 90

31. எண் 100 இற்குப் பொருத்தமான திகதி யாது?
(1) ஏப்ரல் 01 (2) ஏப்ரல் 10 (3) ஏப்ரல் 20

- ஒரு கவிதையின் நான்கு வரிகள் மாற்றி எழுதப்பட்டுள்ள விதம் கீழே காணப்படுகின்றது. அவற்றின் சரியான ஒழுங்கு முறை யாது?

32. (A) வீட்டில் என்னிடம் இருக்கிறது
(B) நித்தம் நித்தம் அதன் முன்னால்
(C) மெத்தப் பெரிய கண்ணாடி
(D) நின்றே அழகு பார்த்திடுவேன்
(1) C, B, A, D (2) C, A, B, D (3) D, C, A, B

* * * * *

- ஒரு போட்டியின் மூன்று சுற்றுகளில் ஐந்து விளையாட்டு வீரர்கள் விளையாடிய விதங்கள் கீழே உள்ளன.

| | சமன் | கமல் | கணேஷ் | ஹசன் | சேகர் |
|---|---|---|---|---|---|
| முதல் சுற்று | - | + | + | 0 | + |
| இரண்டாம் சுற்று | 0 | 0 | 0 | - | + |
| மூன்றாம் சுற்று | + | - | + | 0 | - |

நல்லது = +
சராசரி = 0
குறைவு = -

33. முழுப் போட்டியிலும் நன்றாக விளையாடியவர்
(1) கணேஷ் (2) சேகர் (3) சமன்

34. போட்டியில் கமலிலும் பார்க்க நன்றாக விளையாடிய விளையாட்டு வீரர்
(1) சமன் (2) சேகர் (3) ஹசன்

- சரியான விடையைத் தெரிவு செய்க.

35. ஒரு விழாவிற்காகச் சில மாகாணங்களிலிருந்து வந்த பிள்ளைகளுக்கு வடிவத்திலும் நிறத்திலும் வேறுபட்ட இலச்சினைகள் வழங்கப்பட்டன.

| | |
|---|---|
| மத்திய மாகாணம் | நீல நிறம் |
| வட மாகாணம் | மஞ்சள் நிறம் |
| தென் மாகாணம் | சிவப்பு நிறம் |

| | |
|---|---|
| ஆண் பிள்ளை | வட்டம் |
| பெண் பிள்ளை | நாற்பக்கல் |

இதற்கேற்ப சரியான கூற்று யாது?
(1) வட மாகாணத்தின் பெண் பிள்ளைகள் நீலநிற நாற்பக்கல்களை அணிந்திருந்தனர்.
(2) மத்திய மாகாணத்தின் ஆண் பிள்ளைகள் நீலநிற வட்டங்களை அணிந்திருந்தனர்.
(3) தென் மாகாணத்தின் பெண் பிள்ளைகள் மஞ்சள்நிற நாற்பக்கல்களை அணிந்திருந்தனர்.

36. இன்று ஞாயிற்றுக்கிழமை. நேற்கு முன் தினத்துக்கும் (முந்தா நாள்) கடந்த திங்கட்கிழமைக்குமிடையே எத்தனை நாட்கள் இருந்தன?
(1) 1 (2) 2 (3) 3

37. உட்பக்கம் தெரியாத பெட்டி ஒன்றில் மூன்று நீலநிறப் பேனைகளும் மூன்று கறுப்பு நிறப் பேனைகளும் உள்ளன. பேனைகளைப் பார்க்காமல் ஒரே நிறத்திலான இரு பேனைகளைத் தவறாமல் பெறுவதற்குப் பெட்டியிலிருந்து வெளியே எடுக்கப்பட வேண்டிய பேனைகளின் குறைந்தபட்ச எண்ணிக்கை யாது?
(1) 2 (2) 3 (3) 4

38. ஒரு தொட்டியின் கொள்ளளவு 10 லீற்றர் ஆகும். ரஞ்சன் ஒரு தடவைக்கு நான்கு லீற்றர் வீதம் இட்டு அத்தொட்டியில் நீரை நிரப்புகின்றார். ஒவ்வொரு தடவைக்கும் பின்னர் அவருடைய தம்பி இரண்டு லீற்றர் வீதம் அந்நீரை வெளியே எடுக்கின்றார். ரஞ்சன் எத்தனை தடவை நீரை இட்ட பின்னர், முதன்முதலாகத் தொட்டி நிரம்பும்?
(1) 4 (2) 5 (3) 6

39. குகனிடம் இரண்டு ரூபாய் நாணயங்களாகவும் ஐந்து ரூபாய் நாணயங்களாகவும் ரூ.23 உள்ளது. அதில் இருக்கத்தக்க இரண்டு ரூபாய் நாணயங்களின் எண்ணிக்கை யாது?
(1) 3 (2) 4 (3) 6

40. ஒரு பேருந்து, ஒரு லொறி, ஒரு மோட்டார்க் கார் ஆகியன 150 கிலோமீற்றர் தூரம் செல்வதற்கு ஒரே இடத்திலிருந்து புறப்பட்டன. அவை புறப்பட்ட நேரங்களும் சென்ற கதிகளும் கீழே காணப்படுகின்றன.

| வாகனம் | புறப்பட்ட நேரம் | கதி (மணித்தியாலத்துக்கு கிலோமீற்றர்) |
|---|---|---|
| பேருந்து | காலை 6.00 | 50 |
| லொறி | காலை 7.00 | 30 |
| மோட்டார்க் கார் | காலை 8.00 | 75 |

அவை சேர வேண்டிய இடத்தை என்ன ஒழுங்குமுறையில் அடைந்தன?
(1) மோட்டார்க் கார், பேருந்து, லொறி
(2) பேருந்து, லொறி, மோட்டார்க் கார்
(3) பேருந்து, மோட்டார்க் கார், லொறி

more Past papers
at www.Edukinniya.lk

* * * *

மாணவர்களைப் பாடசாலைக்குத் தேர்ந்தெடுப்பதற்கும் மாணவர்களுக்கு உதவிப்பணம் வழங்குவதற்குமாகத் தரம் ஐந்து மாணவர்களுக்கு நடாத்தப்படும் பரீட்சை, 2011 ஓகஸ்ட்

வினாத்தாள் II    1 மணித்தியாலம்    45 நிமிடம்

1. பின்வரும் பந்தியை வாசிக்க.

ஒரு நாட்டின் பெருமை அங்குள்ளவர்களின் கல்வியில் தங்கியுள்ளது. அத்தகைய பெருமையை ஈட்டிக் கொடுப்பதற்குக் காரணமாக அமையும் நூல்களை நாம் கண்கள்போல் போற்றுவது எமது கடமை. எனவே நூல்நிலையங்கள் முதலியவற்றில் காணப்படும் நூல்களைக் கிழிக்காமல் பக்குவமாகப் பயன்படுத்துவோம்.

கேட்கப்பட்டுள்ள வினாக்களுக்குரிய விடைகளைப் பந்தியிலிருந்து தெரிந்தெடுத்து, புள்ளிக் கோட்டின் மீது எழுதுக.

(i) ஒரு நாட்டின் பெருமை அந்நாட்டு மக்களின் எதில் தங்கியுள்ளது? ........................
(ii) 'சிறுமை' என்ற சொல்லின் எதிர்க்கருத்துச் சொல்லை எழுதுக. ........................
(iii) 'நூலகங்கள்' என்பதன் ஒத்தகருத்துச் சொல்லை எழுதுக. ........................
(iv) இங்கு இடம்பெறும் உவமானத்தை எழுதுக. ........................
(v) கவனமாக என்ற கருத்தைத் தரும் சொல்லை எழுதுக ........................
(vi) தன்மை பன்மை எதிர்கால வினைச்சொல்லினை எழுதுக ........................

2. (அ) கீழே தரப்பட்டுள்ளவற்றிற்கு அடைப்புக்குள் இருந்து பொருத்தமான சொல்லைத் தெரிவு செய்து புள்ளிக் கோட்டின் மீது எழுதுக.

(அம்மா, நாம், மேசை, புத்தகங்கள், நான், மாணவர்கள்)

(i) உயர்திணை பன்மைப் படர்க்கைப் பெயர்ச்சொல் ........................
(ii) அஃறிணை ஒருமைப் படர்க்கைப் பெயர்ச்சொல் ........................
(iii) தன்மைப் பன்மைப் பெயர்ச் சொல் ........................

(ஆ) பின்வரும் தொடர்களுக்குரிய தனிச்சொல்லை எழுதுக.


(i) குழந்தைகளை உறங்கவைக்கப் பாடும் பாட்டு ........................
(ii) சித்திரங்கள் வரைபவன் ........................
(iii) நாற்புறமும் கடலாற் சூழப்பட்ட நிலம் ........................

3. பின்வரும் ஆங்கில வாக்கியங்களின் கருத்தைத் தமிழில் எழுதுக.

(i) Shall we pluck flowers? ........................
(ii) May I come in? ........................
(iii) I will come tomorrow ........................

4. பின்வரும் வாக்கியத்தின் கருத்தை ஆங்கிலத்திற்கு மாற்றி ஆங்கில எழுத்துகளில் எழுதுக. தயவுசெய்து வகுப்பறையைத் துப்புரவாக்குக. ........................

5. ஒவ்வொரு படத்திற்கும் பொருத்தமான ஆங்கிலப் பெயரை ஆங்கில எழுத்துக்களிலே எழுதுக.

(i)  ........................

(ii)  ........................

6. (i) பின்வரும் வாக்கியம் சிங்களத்தில் சொல்லப்படும் விதத்தைத் தமிழ் எழுத்துகளில் எழுதுக.

**வாருங்கள் உட்காருங்கள்**

(ii) பின்வரும் வாக்கியத்தின் கருத்தைத் தமிழில் எழுதுக.

**புஸ்தகாலய கீயட்டத அரின்னே**

7. பின்வரும் பழமொழிகளில் உள்ள வெற்றிடங்களை நிரப்புக.

(i) பழகப் பழகப் பாலும் ........................
(ii) இக்கரை மாட்டுக்கு ........................ பச்சை

* * * * *

8. பொருத்தமான நிறுத்தக் குறிகளை இடுக.
   (i) சந்தைகள் பூங்காக்கள் என்பன பொதுச் சொத்துகளாகும்.
   (ii) தம்பி எங்கே போகிறாய்

9. சரியாக எழுத்துக்கூட்டப்பட்டுள்ள சொல்லின் கீழ்க் கோடிடுக.
   (i) (1) ஆராச்சி (2) ஆராய்ச்சி (3) ஆராட்சி (4) ஆராய்சி
   (ii) (1) நட்ச்சத்திரம் (2) நட்சத்திறம் (3) நட்சத்திரம் (4) நச்சத்திரம்

• 10 தொடக்கம் 39 வரையுள்ள வினாக்களுக்குரிய விடையைத் தரப்பட்டுள்ள விடைகளிலிருந்து தெரிவு செய்து அதன் கீழ்க் கோடிடுக.

10. இலங்கைக்கேயுரிய தாவரம்
    (1) தென்னை (2) மாமரம் (3) மாதுளை (4) எண்ணெய் மரம்

11. தாவரத்திற்குப் பூவிலிருந்து கிடைக்கும் பயன்
    (1) அழகூட்டல் (2) அதன் இனத்தைப் பரப்ப உதவும்
    (3) நறுமணத்தைப் பரப்பல் (4) தாவரத்தின் ஆயுட்காலத்தைக் கூட்டல்

12. காற்றின் மூலம் பரம்பல் அடையும் வித்துகள் மாத்திரம் இடம்பெறும் விடை
    (1) புலிநகம், எருக்கலை, சீதேவியார் செங்கழுநீர்
    (2) அச்சி, எருக்கலை, சீதேவியார் செங்கழுநீர்
    (3) அச்சி, மரமுந்திரிகை, எண்ணெய்
    (4) புலிநகம், மரமுந்திரிகை, எண்ணெய்

13. முலையூட்டி விலங்கு
    (1) பல்லி (2) ஓணான் (3) உடும்பு (4) கீரி

14. மண்ணை வளமாக்க உதவும் விலங்கு
    (1) மட்டைத்தேள் (2) மண்புழு (3) மரவட்டை (4) அட்டை

15. பயிர்ச்செய்கையில் விவசாயிக்கு உதவும் விலங்கு
    (1) தேனீ (2) ஏபிட்டு (3) நெல்ஈ (4) தும்பி

16. நடுவதற்கு உகந்த வித்தில் இருக்க வேண்டிய ஓர் இயல்பு
    (1) முதிராத வித்தாக இருத்தல்
    (2) புறத்தோல் கறைபடாது பளபளப்பாக இருத்தல்
    (3) காயப்பட்டிருத்தல்
    (4) வித்து நிறம் மாறியிருத்தல்

www.Edukinniya.lk

17. விற்றமின் அதிகம் இருக்கும் உணவு
    (1) கடலை (2) வத்தாளை (3) சோயா (4) தக்காளி


18. நீரிழிவு நோயைக் கட்டுப்படுத்துவதற்கு மிக உகந்த உணவு
    (1) பாண் (2) நூடில்ஸ் (3) கௌபி (4) மரவள்ளி

19. நுளம்புகளைக் கட்டுப்படுத்துவதற்கு இலகுவான உகந்த முறை
    (1) வீட்டில் உள்ள நுளம்புகளை அழித்தல்
    (2) நுளம்பு முட்டைகளை அழித்தல்
    (3) நுளம்புக் குடம்பிகளை அழித்தல்
    (4) சுற்றாடலில் நீர் தேங்குவதற்கு இடமளிக்காதிருத்தல்

20. தொற்றுநோய் (பிரதேசம் பூராகவும்) பரவும்போது உடனடியாக எவருக்கு அறிவிக்க வேண்டும்?
    (1) பொலீஸ் நிலையப் பொறுப்பு அலுவலருக்கு (2) மருத்துவமனையின் மருத்துவ அலுவலருக்கு
    (3) பாடசாலை அதிபருக்கு (4) பொது சுகாதாரப் பரிசோதகருக்கு


21. நிலநடுக்கத்தின்போது ஒருவர் தன்னைப் பாதுகாப்பதற்கு உடனடியாகச் செய்ய வேண்டியது
    (1) இருக்கும் இடத்திலேயே இருத்தல்
    (2) மரத்திற்குக் கீழே இருத்தல்
    (3) உயரமான கட்டடத்திற்குச் செல்லல்
    (4) திறந்த வெளிக்குச் செல்லல்

* * * * *

22. 

இவ்வுருவில் உள்ள உபகரணத்தைப் பயன்படுத்துவதன் மூலம்
(1) காற்று வீசும் திசையை அறியலாம்
(2) காற்றின் கதியை அளக்கலாம்
(3) சுழிக்காற்றுப் பற்றி முன்கூட்டியே அறிவிக்கலாம்
(4) வானிலை பற்றி முன்கூட்டியே அறிவிக்கலாம்.

23. இலங்கையின் மிகவும் உயரமான நீர்வீழ்ச்சி
(1) பம்பரகந்த (2) தியலும (3) லக்சபான
(4) துன்ஹிந்த

24. 

உருவில் உள்ள உடுக்கோலத்திற்கு வழங்கும் பெயர் யாது?
(1) பெருங்கரடி
(2) கலப்பை
(3) தேள்
(4) வேட்டைக்காரன்

25. கொழும்பு முகத்துவாரப் பிரதேசக் கடலில் விழுவது
(1) மகாவலி கங்கை (2) களனி கங்கை (3) களு கங்கை (4) வளவை கங்கை

26. அபய வாவியைக் (பவசக்குளம்) கட்டுவித்த அரசன்
(1) பண்டுகாபயன் (2) தேவநம்பியதீசன் (3) தாதுசேனன் (4) மகாசேனன்

27. 

மஞ்சள் நிறப் பின்னணியில் கருமை நிறத்தில் உள்ள வீதிக்குறி குறிப்பிடுவது
(1) பாதசாரிகள் கடந்து செல்லும் இடம் முன்னால் உள்ளது என்பதை
(2) விபத்து ஏற்படத்தக்க வளைவு முன்னால் உள்ளது என்பதை
(3) வேலை செய்பவர்கள் முன்னால் உள்ளனர் என்பதை
(4) பிள்ளைகள் கடந்து செல்லும் இடம் முன்னால் உள்ளது என்பதை

28. சிவப்பு நிறத்தையும் மஞ்சள் நிறத்தையும் கலக்கும்போது உண்டாகும் நிறம் யாது?
(1) கபிலம் (2) ரோஸ் (3) ஊதா (4) செம்மஞ்சள்

29. வனைசில்லு பயன்படுத்தப்படுவது
(1) வனைதல் தொழிலில் (2) வயல் வேலைகளில்
(3) சுரங்கக் கைத்தொழிலில் (4) இரத்தினக்கல் துலக்குவதற்கு


30. மரங்களைச் செதுக்கப் பயன்படுத்தத்தக்க மிக உகந்த உபகரணம்
(1) துறப்பணம் (2) கத்ததிரிக்கோல் (3) உளி (4) சீவுளி

31. 

உருவில் உள்ளவர்
(1) கலாநிதி ஆனந்தக் குமாரசுவாமி
(2) சேர் டீ.பீ.ஜயத்திலக்க
(3) கலாநிதி ரீ.பீ.ஜயா
(4) அனகாரிக தர்மபால

32. உடையில் பட்ட தார்க் கறையை அகற்றுவதற்கு மிக உகந்த பொருள்
(1) தேங்காயெண்ணெய் (2) மண்ணெண்ணெய் (3) எலுமிச்சஞ்சாறு (4) சவர்க்காரம்

33. தினசரிச் செய்தித்தாள்களின் இறுதிப் பக்கத்தில் பெரும்பாலும் இடம்பெறுவன
(1) திடீர் விபத்துக்கள் பற்றிய தகவல்கள்
(2) விளையாட்டுக்கள் பற்றிய தகவல்கள்
(3) வெளிநாட்டுச் செய்திகள்
(4) தொலைக்காட்சி நிகழ்ச்சிகள் பற்றிய விவரங்கள்

34. 

உருவில் உள்ள பாதம் எதற்கு உரியது?
(1) கோழிக்கு (2) தாராவுக்கு
(3) கிளிக்கு (4) பருந்துக்கு


* * * * *

more Past papers
at www.Edukinniya.lk




35. வானில் சந்திரனை மிகப் பெரிதாகப் பார்க்கக்கூடியது
(1) பௌர்ணமிக்கு முந்திய தினத்தில் (2) பௌர்ணமி தினத்தில்
(3) பௌர்ணமிக்கு அடுத்த நாள் (4) அட்டமி தினத்தில்


36. மின்சூளை மிகப் பிரகாசமாக ஒளிரச் செய்வதற்காக உலர் மின்கலங்கள் சரியாகத் தொடுக்கப்பட வேண்டிய விதம் எவ்வுருவில் காணப்படுகிறது?



(1) (2) (3) (4)


37. 

உருவில் உள்ள தையல் முறை எதற்கு மிக உகந்தது?
(1) கிழிந்த உடையைத் தைப்பதற்கு
(2) தெறியோட்டையைத் தைப்பதற்கு
(3) உடையின் கரையைத் தைப்பதற்கு
(4) சட்டையின் கழுத்துப் பட்டியைத் தைப்பதற்கு

38. 

இவ்வுரு எதனைக் காட்டுகின்றது?
(1) உடையத்தக்கது என்பதை
(2) கவனமாகப் பிடித்துக் கொள்க என்பது
(3) இப்பக்கம் மேலே என்பதை
(4) ஒன்றன்மீது ஒன்றாக வைக்கக்கூடாது என்பதை

39. ஓட்டப் போட்டியில் தொடக்க நிலையைக் காட்டும் உரு யாது?



(1) (2) (3) (4)

- தரப்பட்டுள்ள வெற்றிடத்தில் விடையை எழுதுக.

40. எண்கோலத்தில் அடுத்துவரும் இரு எண்களையும் முறையே எழுதுக.
4040, 4030, 4020, 4010 ......., .......

41. பின்வரும் பின்னங்களில் $\frac{1}{3}$ இற்கான சமவலுப் பின்னத்தைத் தெரிவு செய்து எழுதுக.

$\frac{1}{6}, \frac{2}{6}, \frac{3}{6}, \frac{4}{6}$ ......., .......

42. உருவில் $\frac{1}{8}$ நிழற்றப்பட்டுள்ளது.





(i) அதில் மேலும் $\frac{1}{4}$ ஐ நிழற்றுக.
(ii) அப்போது நிழற்றப்படாமல் எஞ்சியுள்ள பகுதியைப் பின்னமாக எழுதுக. ......., .......

43. 3, 5, 7, 9 என்னும் எண்களைச் சரியாகப் பயன்படுத்தி வெற்றிடங்களை நிரப்புக. (ஒரே எண்ணைப் பல தடவை பயன்படுத்தலாம்)
(i) 5 + ..... + ...... = 21 (ii) ... + ..... + .... = 19 (iii) ... + .... - 3 = 13


44. மூன்று நண்பர்கள் ஆளுக்கு ரூ.200 வீதம் செலுத்திச் சேர்த்த பணத்தில் ரூ.285 இற்குப் பழங்களை வாங்கி மீதிப் பணத்தைத் தம்மிடையே சமமாகப் பங்கிட்டனர்.
(i) பழங்களை வாங்கிய பின்னர் எஞ்சியிருந்த பணம் யாது? ரூ. ....................
(ii) மீதிப் பணத்தில் ஒருவருக்கு எவ்வளவு கிடைத்தது? ரூ. ....................

45. காலை 6.50 இற்குப் பாடசாலைக்கு வந்த முரளி பிற்பகல் 2.15 வரைக்கும் பாடசாலையில் தங்கியிருந்து வீட்டிற்குப் புறப்பட்டுச் சென்றான்.
(i) முரளி பாடசாலையிலிருந்து புறப்பட்ட நேரத்தை 24 மணித்தியாலக் கடிகாரத்திற்கேற்ப எழுதுக. ................................ மணித்தியாலம்
(ii) முரளி பாடசாலையில் எவ்வளவு நேரம் தங்கியிருந்தான்? .......... மணித்தியாலம் .......... நிமிடம்

46. அட்டவணையில் உள்ள வெற்றிடங்களை நிரப்புக.

| திண்மம் | | முகங்களின் எண்ணிக்கை | உச்சிகளின் எண்ணிக்கை | ஓரங்களின் எண்ணிக்கை |
|---|---|---|---|---|
| (i) கனவுரு |  | 6 | ............... | ............... |
| (ii) நான்முகி |  | 4 | ............... | ............... |

47. (i) வரைபிற்கேற்ப அட்டவணையில் உள்ள வெற்றிடங்களை நிரப்புக.
(ii) அட்டவணையில் உள்ள தகவல்களுக்கேற்ப வரைபைப் பூரணப்படுத்துக.





| பழவகை | பழங்களின் எண்ணிக்கை |
|---|---|
| மாம்பழம் | 18 |
| றம்புட்டான் | 25 |
| பப்பாசி | ...... |
| கொய்யா | 20 |

48. 6 பென்சில்கள் வீதம் உள்ள நான்கு பெட்டிகளும் 8 பென்சில்கள் வீதம் உள்ள மூன்று பெட்டிகளும் உள்ளன. அந்த ஏழு பெட்டிகளிலும் உள்ள பென்சில்களின் எண்ணிக்கை யாது? ...............

49. கீதா 1995 ஆம் ஆண்டு ஓகஸ்ற் 21ஆந் திகதி பிறந்தார். இன்று அவருடைய வயது யாது?
.....................


50. ஒவ்வொன்றும் 25cm நீளமுள்ள 4 உலோகத் துண்டுகள் ஒரு தனித் துண்டாக ஒட்டப்பட்டன. ஒவ்வொரு தடவை ஒட்டும்போதும் ஒவ்வோர் உலோகத் துண்டின் 5cm ஐ ஒன்றன்மீதொன்று வைக்க நேரிட்டது. இறுதியாகக் கிடைக்கும் உலோகத் துண்டின் நீளம் யாது? .............. cm

51. உருவில் உள்ள தகவல்களுக்கேற்ப அட்டவணையில் உள்ள வெற்றிடத்தை நிரப்புக.





| இருந்து | வரைக்கும் | தூரம் |
|---|---|---|
| கொழும்பு | மாத்தறை | 160km |
| காலி | மாத்தறை | 45km |
| காலி | அம்பாந்தோட்டை | 125km |
| கொழும்பு | அம்பாந்தோட்டை | ......km |

52. உருவில் உள்ள காணித் துண்டின் சுற்றளவைக் காண்க.




............... m ................. cm

53. ஒரு லீற்றர் பானத்தை ஒவ்வொன்றும் 275 மில்லிலீற்றர் அளவான 3 குவளைகளில் இடும்போது எஞ்சியிருக்கும் அளவு யாது?
(1லீற்றர் = 1000 மில்லிலீற்றர்)




................. ml

- வெற்றிடங்களுக்குப் பொருத்தமான விடையை அடைப்புக்குறிகளினுள்ளேயிருந்து தெரிந்தெடுத்து அதன் கீழ்க் கோடிடுக.

54. மழை பெய்தாலும் ...................... (பெய்கிறது/பெய்யும்)
55. சபரி ஒவ்வொரு ...................... (பழங்களாக/பழமாக) சுவைத்துப் பார்த்தாள்.
56. கடற்கரையில் சனக்கூட்டம் ............ (நிறைந்திருந்தது/நிறைந்திருந்தனர்)
57. என்னால் .................... (எழுதப்பட்ட/எழுதிய) கதையை நண்பன் வாசித்தான்.
58. காலையில் எழுந்தவுடன் நாம செய்ய .............. (வேண்டியன/வேண்டியது) யாவை?
59. பிணை மான் முன்னே செல்ல கலைமான் அதனைப் பின்னே ......... (தொடர்ந்தது/தொடர்ந்தன)
60. “எமது பாடசாலை மிகவும் அழகானது” என்னும் தலைப்பின் கீழ் **மூன்று** வாக்கியங்கள் எழுதுக. (ஒவ்வொரு வாக்கியத்திலும் **ஐந்து** சொற்களுக்கு மேல் இடம்பெற வேண்டும். **எழுவாய் பயனிலைத்** தொடர்புகள் சரியாக இருக்க வேண்டும்).

(i) ..............................................................................................................

..............................................................................................................

(ii) ..............................................................................................................

..............................................................................................................

(iii) ..............................................................................................................

..............................................................................................................

www.Edukinniya.lk

* * * * *